# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுரு] யாழ்ப்பாணம்:- நந்தன ஞூ ஆனிமீ உஅ உ வெள்ளிக்கிழமை (11 July 1952) [இல - உசு]


## சிரேஷ்ட தராதரப் பரீட்சை

### இதுவே கடைசி முறையாம்

இப்பொழுது நடைபெறுகின்ற சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையே கடைசிப் பரீட்சையாகும். இதற்குப் பதிலாகப் பொதுத் தராதரப் பரீட்சை (G. C. E.) என ஒன்றை நடத்தப்போவதாகக் கல்விப்பகுதி இலாகா திட்டமிட்டிருக்கின்றது. வருகிற மார்கழி மாதம் நடக்கப்போகின்ற சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குப் பதிலாக முதன்முதல் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெறும் என அறியவருகிறது. ஆனாற் குறுகியகாலங் காரணமாக, இப்பொதுத் தராதரப் பத்திர வினாக்கள் சிரேட்ட தராதரப் பத்திர வினாக்கள் மாதிரியே இருக்குமாம்.

இப்பொதுத் தராதரப் பத்திரத்தில் ஒவ்வொரு மாணவனும் எத்தனை பாடங்களில் சித்தி யடைகின்றானோ அத்தனை பாடங்களுக்கும், தராதரப் பத்திரம் வழங்கப்படும். ஆனால் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் குறிக்கப்பட்ட பாடங்களில் சித்தியடைந்தாற்றான் தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மூன்று பாஷைகளிலும் ஒரேமாதிரியான பொதுத்தராதரப் பத்திர வினாக்களே கொடுக்கப்படும்.

## ஐயனே அரசே அருட்பெருங் கடலே

திருச்சிற்றம்பலம்

பொய்யனே னகநெகப் புகுந்தமு தூறும்
புதுமலர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தேன்
ஐயனே யரசே யருட்பெருங் கடலே
யத்த னேயயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

திருச்சிற்றம்பலம்

## சைவாலயம் தீக்கிரையானது

இக்கினியாக்கலையில் இருக்கும் ஓர் இந்து முருகன் ஆலயமொன்றும், 20 அறைகளைக் கொண்ட விவசாயப்பகுதியைச் சேர்ந்த கட்டிடமும் அகஸ்மாத்தாய் தீப்பற்றி எரிந்ததாகத் தெரிகின்றது. தொழிலாளர்கள் தங்கள் மத்தியான உணவைப் பக்குவஞ்செய்யும் பொழுது மேற்படி தீ பிடித்ததாம். 30 தொழிலாளர்கள் தங்கள் பொருட்களை இழந்தனராம்.

## கோர விபத்து

சேர் அம்பலவாணர் கனகசபையின் பேரனாகிய S. இராசேஸ்வரம் என்பவர், தனது சலனத் துவிச்சக்கரவண்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குப் போகும் வழியில் ஓர் கடும் விபத்துக்குள்ளாகி இறந்தார். அதே வண்டியில் இருந்த அவருடைய நண்பர் சிறு காயங்களுடன் தப்பினார் என அறியவருகின்றது.

## சிவஞான போதச் செம்பொருள் விளக்கம்

### ஒன்பதாஞ் சூத்திரத் தெளிவு

( .... திரு. V. P. காந்திமதிநாதபிள்ளை .... )

ஊனக் கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம்பதி, விதியெண்ணும் அஞ்செழுத்தே.

தன்னியல்பு உணர்த்தப்பெற்ற உயிர், சிவத்தைத் தன்னுள்ளே சிவோகம் பாவனை செய்துநாடும்.

தன்னியல்பு உணர்த்தப் பெற்ற உயிர் சிவத்தை எங்கே எவ்வாறு நாடுமென்பதை ஆராய்வாம். சிவம்சித்துப்பொருள். அதனைப் பசுஞான பாசஞானங்களால் அறிய முடியாதென்றோம. பாச ஞானமென்பது கருவிகளினுதவியாலறிவதென்றும், பசு ஞானமென்பது அக்கருவிகளின் வாசனை உதவியாலறியுமென்றும் சொன்னோம். எனவே, சிவத்தை அறிதற்கண் பாசஞான பசுஞானங்களிரண்டும் பயன்படாவென முடியும். 'ஊனக் கண் பாசமுணராப் பதி' என இச்சூத்திரம் கூறியதன் கருத்து இதுவே! ஈண்டு 'ஊனக் கண்' என்றது குறை வினையுடைய அறிவாகியபசு ஞானத்தையும், 'பாசம்' என்றது பாச ஞானத்தையும் உணர்த்தின. 'கண்' என்பதற்கு 'அறிவு' என்பது பொருள். 'பதி' என்பது சிவத்தை உணர்த்தியது. இப்பதி, பசுஞான பாசஞானங்களானறியப்படானு, வேறெந்த ஞானத்தாலறியப் படுவன் என்பதை அடுத்து ஆராய்வாம்.

உயிர் தன்னியல்பையும் அறியாதுநின்றது. அதனை அறிதற்கண்ணும், மேற்கூறிய பாசஞான பசு ஞானங்கள் பயன்படவில்லை. அதனை உயிர்க்குபதேசித்துணர்த்துதற் பொருட்டே, சிவம் குருவுமாய் வந்துதவிய தென்றோம். இவ்வுபதேச ஞானத்தால், உயிர் தன்னியல்பை உணாவதோடு, தானும் சிவமும ஒருசாதிச் சித்துப் பொருளெனவும உணருமென்றோம். அதாவது சிவத்தின் தன்மையை ஒருசிறிதும் அறியாதுநின்ற உயிர்க்கு, அச்சிவத்தை அறிதற்கு [illegible] [illegible] என முடியும். இவ்வுபதேச ஞானத்தா லுணர்த்தப்பட்ட வழியிலேயே, சிவத்தை நாடவேண்டுமெனவும் முடியும். இம்முடிபையே இச் சூத்திரம், 'ஞானக் கண்ணினில்நாடி' என்றுணர்த்தியது ஈண்டு 'ஞானக் கண்' என்றது சிவஞானத்தை. இது நிற்க, இச் சிவஞானத்தை உதவியாகக் கொண்ட உயிர் அவ்வுதவிகொண்டு சிவத்தை எங்கே? எவ்வாறு? நாடுவது என்பதையும் ஆராய்வாம.

**சிவத்தை எங்கே தேடுவது?**

தான் வேடனல்லன். தானும் தன் பிதாவும் அரச

தொடர்ச்சி 3-ம் பக்கம்

அரசியல் அலை

## 'செலவாளிப் பட்டம் பெற்றுவிட்டது இலங்கை!

### உணவுதேட ஒருபெரும் தொகை!!

### ஆனல் அந்நியநாடுகளில் இன்னமும் தஞ்சம்!!!

**வருகின்ற வரவு செலவு வருடத்துக்கு இலங்காதீபத்தின் செலவு 1,308,484,287 ரூபா என்ருல், நேயர்கள் திடுக்கிட்டு விடப்படாது! சென்ற ஆண்டிலும் ஏறக்குறைய அந்த அளவே என்பதில் ஆறுதல்கொள்ளலாம்.**

ஆனல் ஒன்றுமட்டும் உண்மை. குடும்பம் பெருத்துவிட்டது. பொறுப்பு அதிகரித்துவிட்டது. கண்ணியம் கூடிவிட்டது. புறநாட்டில் மதிப்பும் ஏற்படுகின்றது........ ஆகவே நாட்டு வாழ்வை விட்டு நகரசீவியஞ் செய்யவேண்டிய நிலைமைஏற்பட்டு விட்டது. அப்படி என்றுற் செலவுகள் பெருகுந்தானே?

பாராளுமன்றமேற்சபை,பிரதிநிதிகள்சபை; இவைக்குமாத்திரம் ஒரு நியாயமான செலவு செய்யவேண்டும். ஊரவர்கள் ஒவ்வொருசதமாய் உதவ அந்தப்பணத்தைக்கொண்டு நடைபெறும் பாராளுமன்றம் ஒற்றுமையை ஊரில் உண்டாக்கிவிட்டதா என்று எவரும்கேட்பார்கள். அப்படி யொன்றும் இல்லை.

வெளிநாடுகளில் இலங்கையின் சுதந்திர நிலைமைக்கேற்பப் பிரதிநிதிகள் நிலையங்கள் நிறுவப்பட்டமையால் வரும் பண விரயம் அதற்குத் தக ஏதும் நன்மைகள் தந்துவிட்டதா? என்றெல்லாம் கேட்பார்கள். அவ்வாறொன்றுமில்லை.

உணவுப்பொருள்தேட ஓடி ஓடிநடைபெறும் மகாநாட்டாலும் உள்ளூரிற் பிரசாரத்தாலும் பெருந் தொகைப பணம் போகின்றது. உணவு நிலைமை நன்ருயிருக்கிறதா?.... இரண்டுமாதகாலத்திற்கு போதிய உணவுப் பொருள்கள் இருப்பில் இருக்கின்றதே! .... பெருங்காரியம்.

ஆகவே பண விரயம் தந்த பலன் என்ன? ..............

## இலக்கியத்திற் சிறுகதை எடுத்துக்கொண்ட இடம்

### கலைஉலகின்கவினுக்குப் பொருந்துமா?

தமிழ்இலக்கிய வளர்ச்சியிலே இன்று ஒரு புதிய நிலை— மறுமலர்ச்சி அழகு உருவெடுத்து வந்துகொண்டிருக்கிறது. சமீபகாலமாக, ஏன் கடந்த ஐம்பது ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்பட்ட பொருளைக்கொண்டு தமிழிலக்கியம் தனக்கு ஒரு அணியினை இழைத்து அழகுபடுத்தத் தயாராயிருக்கிறது. ஆனல் சமயத்துக்கேற்ப உருமாறும் 'இலக்கியப் பச்சோந்திக'ளால் வளர்ச்சி யுறுப தமிழிலக்கியம் வளமிழக்குமானல் அந்தக் குற்றத்திற்குப் பொறுப்பாளிகள் இந்த இருபதாம் நூற்றுண்டில் வந்தும் 'நவீன இலக்கிய கர்த்தாக்களே' என்று அறுதியிட்டுக் கூறிவிடலாம்! ஒரு மொழியின் வளர்ச்சிக்குக் காலப்போக்குடன் ஒட்டிய புத்தம் புதிய சிருட்டிகளை உண்டாக்கும் கதாசிரியன், நாடகாசிரியன், கவிஞன் எல்லாரும் உறுதுணை புரிகின்றார்கள். ஆனல் சூழ்நிலையின் ஆழத்தையறியாமல் எதை யெதையோ திறுக்கிவிட்டு மறுமலர்ச்சி, புரட்சி, எழுச்சி, ... என்றெல்லாம் கூப்பாடு போடுவது ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் எழுத்தாளனின் எழுச்சிக்கும் ஏற்ற செயலல்ல. ஆனல் உண்மை யிப்படியிருந்தும் பரந்து கிடக்கும் தமிழ்நாட்டிலிருந்து இதே கருத்துள்ள குரல்கள் சொல்லளவிலும் பெயரளவிலும் வேறுபாடுகள் தோன்ற எதிரொலித்துக்கொண்டிருப்பது தமிழ் மக்களின் இரசிகத்தன்மையை ஏளனஞ் செய்வதாகும்!

மபான். த. 'நாவேந்தன்'

#### ஏன் இந்த நிலை?

ஏன் இந்த நிலை என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்தத் தமிழ்நாட்டிலே எழுத்தாளர்களும் கலைஞர்களும் சுயமாகச் சம்பாதிக்க முடியுமா? பஞ்சமும் பிணியும் வாழ்க்கையைப் பதைபதைக்கச் செய்யக் கோணலான வழியிலேயாவது மனிதன் வாழத்தானே எண்ணுவான்! எழுத்தாளர்களும் மனிதர்கள்தாமே!

இன்று இலக்கிய உலகம் 'சதைப் பசி' கொண்டலைகிறது. வயிற்றுப் பசியினல் வாடும் கதாசிரியர்கள் 'சதைப்பசி' தீர்க்கும் "சரக்குகளை"ச் சிருட்டித்தால் இலக்கிய உலகிலே அவற்றிற்கு ஏராளமான மதிப்பு. ஐந்து சதம் பெறாதது ஐம்பது சதத்திற்கு விலைபோகும்! இதை யறிந்துதானே... என்னவோ நாளொரு வண்ணமும் பொழுதொரு புதுமையுமாக எட்டணு நாவல்கள் "படுக்கைஅறை", "பருவப்பசி", என்றெல்லாம் புற்றீப் போலப் புறப்பட்டுக்கொண் டிருக்கின்றன. இவற்றிற்குப் பொறுப்பாளிகள் யார்? எழுத்தாளர்களா? இரசிக உலகமா? 'புறநானூறு கண்ட

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனுமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தனஹூ ஆனிமீ
உஅ உ வெள்ளிக்கிழமை


## சைவ மணங் கமழ

சமயகுரவர்கள் சந்தான குரவர்கள் திருத்தொண்டர்கள் இறைநெறிநின்று தெய்வ மதம் வளர்த்தார்கள். இது பல நூற்றூண்டுகளுக்குமுன். அண்மையிலே அவ்வழி ஒழுகி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருந்தகையாரும் சைவ மணங் கமழச் செய்தார். இச் சிறப்புவாய்ந்த முன் மாதிரியெல்லாம் இருக்கவும் இன்று சைவவாழ்வு நடத்துவாரைக் காண்பது அரிதாகி வருகின்றதென்றால் எங்கள் நாடு செய்த பழிதான் என்னேயோ?

சைவச் சங்கங்கள் பலப்பல உள. அவைதாம் பல வேறு ஊர்களில் உண்டு. எனினும் சைவவாழ்வைக் காணேம். சைவக் கலாசாலைகளோ வேண்டியன இருக்கின்றன. இலங்கையில் எப்பாகத்திலும் உள்ளன. இருந்தும் சைவ வாழ்வு நம் தமிழ் மாணவரிடத்து மிளிரஇல்லையே!

சைவ நூல்கள் எண்ணிறந்தன பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. சைவப் பத்திரிகைகள் ஆங்காங்கு வெளிவருகின்றன. அப்படியானுலும் சைவ வாழ்வு எவ்வகையாலும் நிலவுகின்றதென்று சொல்ல இடமுண்டா?

இந்தநிலைமையை உற்று நோக்குமிடத்து ஒன்று புலனுகின்றது. எங்கணும் எவர்களும் வாய் வேதாந்தம் பேசி அகமகிழ்ந்து நிற்கின்றதோ டமைகின்றார்களே அன்றிச் செய்கை முறையிற் சைவ வாழ்வை வாழ்ந்து காட்டுகின்றார்கள் இல்லை என்பது வெளிப்படையாய் விளங்குகின்றது.

ஸ்ரீ - ல - ஸ்ரீ நாவல நற்றகையார் தாம் எழுதிய எடுத்துரைத்த ஒவ்வொரு சைவநெறியையும் தம் அதி உத்தம வாழ்க்கையில் ஒழுகிவந்தார் என்பது எவருமறிந்த ஓர் உண்மை. அந்த அருந்தவம் உஞற்றிய அறிஞர் மறைந்தபின்னர் எங்கள் நாட்டில் சைவ வாழ்க்கை வாழ்பவர்கள் தொகை குறைந்துகொண்டே வருகின்றது.

'சைவாலயங்கள் சைவக் கல்விக் கழகங்கள், சைவ நூல்நிலையங்கள் சைவ சங்கங்கள்என்றவகையிலுள்ள பொறுப்பை ஏற்று நிர்வாகஞ் செய்கின்றவர்கள், சைவமணங்கமழச் செய்ய நினைத்தால் இந் நாட்டிலே தெய்வமணம் வீசிச் சீர் சிறக்காதா? மகாத்மா காந்தி இந்திய தேசிய மகாநாட்டு அங்கத்துவம் பெறுவதற்குநூல் நூற்றல் இன்றியமையாது வேண்டப்படும் என்று ஒருகாற் சொன்னதுண்டு. அதேபோற் சைவ நிலைய நிர்வாகப் பொறுப்புள்ளவர்கள் சைவ இலக்கணம் பொருந்தியவர்கள் ஆகவேண்டும் என்று நிலையப் பிரமாணங்கள் கட்டாயப்படுத்துதல் நன்று.

திருநீறும் உருத்திராக்கமும் தரிக்கும் சைவர்கள் இலை மறை காய்போல இருக்கின்றார்களே அன்றிச் சைவ நாட்டில் எங்குங் காணக் கூடியவர்களாயில்லை. கொலை, களவு, கள், காமம், குருநிந்தை என்னும் ஐம்பெரும் ஆகாச் செயல்கள் இலராகிய பெரியோர்களைக் கொண்ட சைவநிலையங்களே அன்றி மற்றையவை சைவ மணங் கமழச் செய்யும் ஆற்றல் பெறு. எனவே சைவாபிமானிகள் செய்வனசெய்து சிவதொண்டுபுரிவார்களாக.

# தொடர்கதை

# இன்பத்தின் நிலை இதுதானு?

'இறை ஒளி'

20

ஆசிரியர் குமாரனுக்கு உள்ளங் குளிர்ந்தது. ஊழ்வினைப் பயன் ஓடோடியும் பின்தொடர்வதாக இருந்தது. வாழ்க்கையின் பயன் எதுவாயிருக்கலாம் என்ற சந்தேகமும் நீங்குவதுபோலிருந்தது. இன்பம் என்பது துன்பத்தின் பின்னும் முன்னுமாகவுள்ளது என்று தோற்றியது. இவ்வளவில், தபோதனப் பெண்கள் மடத்திலே பங்கஜத்தைநினைத்தார். ஆங்கு சங்கரரையும் மாணிக்கவல்லியையும் பகவதியையும் அழைத்துச் செல்லவெண்ணினர். மூர்ச்சை தெளிந்த பெண்ணிடம் வாழ்க்கை அல்லல் தீரவழி அரன் சேவையிலாவது அரன் அடியார் ஆச்சிரமத்திலாவது அமர்ந்திருத்தலே என்று நற்போதனை சொல்லிக்கொண்டு சிவநாம பசனை செய்துகொண்டு வீதியிற் சென்றுகொண்டிருந்தார்.

உலகமே உதவாது என்று உறுதிகொண்ட பகவதியின் மனம் சிறிது அலைசத்தது. குரலின்தன்மையையும் பாடுபவரின் உருவத்தையும் உற்று நோக்கி ஆசிரியர் குமாரன் தான் இவர் எனறு சந்தேகிக்கத்தொடங்கினள். ஆனல் சங்கீ க் கல்லூரியிலே ஆசிரியர் குமாரனிடங்கொண்ட நினைவு தோண்டிலள். மன வன்மை இடங்கொடுக்கவில்லை. ஒருவர் மீது ஒருவர்கொள்ளு பிரேமை நீர்க் குமிழி போன்றது என்று எண்ணினுள். இருந்தும் வருங்காலத்தில் என்ன நடைபெறப்போகின்றதென்று சிந்தித்தாள்.

இதற்கிடையில் தபோதனிகள் நிலையம்அடைந்தனர். நாலவரும் அங்கே ஒரு ஆரவாரம். தேவிபூசை தேவஒலிபோல் முழங்கியது. 'முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே' என்று மந்திர முழக்கம நடந்தது. வந்தவர்கள யார் என்று கேட்பாருமில்லை. வந்தவர்களும் வேறு நினைக்கவுமில்லை. இன்பக்கடலில் நீந்துவார்போன்றிருந்தது நிலைமை.

'நாயகி நான்முகி நாராயணிகை
நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி
சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி
சூலினி மாதங்கியேன்
றயகியாதி யுடையாள் சரண
மரண மக்கே"

என்ற தேவிதோத்திரம் 'அஞ்சல்' என்று அசரீரி சொன்னதுபோலிருந்தது.

திரும்பவும் சிதைதக்குணவு வழங்கப்பட்டது.

வெறுக்துந் தகைமைகள்
செய்யினுந் தம்மடி
யாரைமிக்கோர்
போக்குந் தகைமை புதியதன்
றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றனிடப்
பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள்
செய்யினும் யானுன்னை
வாழ்த்துவனே.

இவ்வளவில் உலகம் 'என் பதை மறந்து உண்மை இன்பம் என்பது உமையாள் உறைவிடத்துறைதல் என்று அறிந்த சங்கரர் மாணிக்கவல்லி பங்கஜம் பகவதி ஆசிரியர்யாவரும தம்மை மறந்து நின்றனர் - நின்றபொழுது தபோதனச் செல்வி சொல்வாள்.

## 17 லட்சம் செலவு

1952 - ம் வருடத்திய குடிசன மதிப்பெடுப்புக்கு 1,795,385ரூபா செலவானதெனத் தெரிகின்றது. இலங்கையின் சென்ற வருடத்திய கணக்கு 1946 - ல் எடுக்கப்பட்டதாம்.

# டக்டர் பெரோவின் அந்தச் சொற்பொழிவு

## 'அவதூறல்ல' — விசாரணை முடிவு

"நான் நேற்றைய தினம் பாராளுமன்றத்துக்குச் சென்றிருந்தேன். அங்கே நான் எதைக் கண்டேன்? விசித்திரமான சில விலங்குகளை! அரசியல் என்றால் என்ன என்று தெரியாத மனிதர்கள் அங்கே இருந்தார்கள். அவர்களைப் பார்த்தாலே ஒருவருக்கு ஒரு கிழமைக்குச் சாப்பிட மனம வராது. இவர்கள் எப்படிப் பாராளுமன்றத்தில் நுழைந்தார்கள்?

என்று காலிமுக மைதானச் சொற்பொழிவின்போது டாக்டர் பெரோா கூறியதாகவும், அதனை விசாரணை செய்ய ஆனி 17-ந் திகதி ஓர் விசாரணைக் குழுவினரை அரசாங்கம நிறுவியதும் யாவரும் அறிந்த விஷயம். குறித்த விஷயத்தைப்பற்றி விசாரணைக் குழுவினர் டக்ரர் பெரேராவை நேரிலழைத்து விசாரணை செய்த அளவில், பெரோாவின் பேச்சு அவதூறானதல்ல வென்றும் சபை உரிமைகளை மீறியதுமாகா தென்றும் வெளியிட்டதாக அறியவருகிறது.

## ஸ்ரீ திருக்கேதீச்சரம்

இந்த ஆனி மீ 26 உ (9-7-52) புதன்கிழமை, புராதன புண்ணிய தலமாகிய திருக்கேதீஸ்வரத்தின் கண் ணே கோவில் கொண்டருளிய கேதீஸ்வர நாதருக்கும் கௌரி நாயகி அம்மையாருக்கும விநாயகர் முதலான பரிவார மூர்த்திகட்கும் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் ஷெ ஆலய புனர் உத்தாரண திருப்பணிச் சபை உப அக்கிராசனராகிய சைவத் திருவாளர் K V. S. சுந்தரம் அவர்கள் உபயமாக விதிப்படி மிகவுஞ் சிறப்பாகப் பன்னூற்றுக்கணக்கான அன்பர்கள் முன்னிலையில் இனிதாக நிறைவேறியது.

அதன்பின்னர் வழக்கம் போல சங்காபிஷேகமும் அன்றிரவு மணவாளக்கோல விசேஷ உற்சவமும் நடைபெற்றன. சுவாமி தரிசனத்தின் பொருட்டு வந்த பன்னூற்றுக் கணக்கான அன்பர்கட்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன்
கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 13—7—52——19—7—52

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

வியாபாரத்திற் பிணக்குகள் உண்டு. ஆயினும் பிரயாசைப்படுதல் வேண்டும். புதுத் தொடர்புகள் நன்மைபயக்கும். வாரமுடிவுக்குள் சடுதியான கருமங்கள் நிறைவேறும்

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

மேற்பார்வையாளருடன் அல்லது இனத்தவருடன் சச்சரவுண்டு. ஆனல் பிறர் உதவியும், நண்பர் உதவியுமுண்டு எதிரிகள் மறைந்து விடுவர். நற்சுகமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

நற்சுகமும், மனத்துக்கமும் நீங்கும். நண்பரிடமிருந்து நற்தகவல் கிடைக்கும். போட்டியில் வெற்றியுண்டு. தகுதி அங்கீகாரம் பெறும். புது வழிகளில் அநேக செலவுண்டு.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

மிகவுஞ் செலவுள்ள வாரம். உத்தியோகத் தொந்தரவும், கெடுதலும், இரகசிய எதிரிகளாற் தோன்றும். அநேக தொல்லைகளுண்டு. புது முயற்சிகளால் அமைதியின்மை வார முடிவில் உண்டு.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

வார முதல் இரண்டு நாளும், சிலரை நம்பி மோசம்போகக் கூடும். மனத்துக்கமுண்டு. பிறர் தொடர்புக்கும், வியாபாரத்துக்கு வாரமிகுதி நன்று. ஆனல் குடும்பத்திற் சிலருக்கு நோயுண்டு. அதனல் மனந் தளம்பும்.

**கன்னிராசி உத்திரம் 2 3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

வார முற்பகுதி சஞ்சலத்தைக் கொடுக்கும். கவனமாயிராவிட்டால் செவ்வாய், புதனில் பயங்கரமான தொந்தரவுகளுண்டு, வியாழனுக்குப் பின் திருத்தமுண்டாகும். கடுமையாக உழைத்தால் சில லாபமுண்டு.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

முதல் நான்கு நாட்களும் நன்மையுள்ளன. நிலை உயர்தலும், புகழும், போட்டியில் வெற்றியுமுண்டு, வியாழன் வெள்ளி, சனி காலை, சில தொந்தரவுகள் உண்டாகக்கூடும். சிறு விபத்துக்களுக்குக் கவனமாயிருக்கவும்.

**விருட்சிகராசி விசாகம் 4 - ம் பாதம் அநுஷம், கேட்டை.**

சித்தியடைய வேண்டுமாயின் கடைமுறையிற் கவனஞ்செலுத்தல் வேண்டும். பணமின்மையால் புது முயற்சிகள் பின்போடக்கூடும். வாரக் கடைசி நாள் மனதைச் சிறிது கலக்கும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

வியாபாரத்துக்கும் பணத் தொடர்புகளுக்கும் நல்ல வாரம். ஆனல் மனச்சாந்தியிராது. சுகவீனம் ஏற்படும். சிறு விபத்துக்களுக்கிடமுண்டு. ஆனல் பயமில்லை. மனைவி இனத்தவர்கள் போர் முறையில் நிற்பர்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

செலவு அதிகமுண்டு. குடும்பத்தில் தொந்தரவுண்டாகும். பணவிரயமுண்டு. முக்கியமான கருமங்கள் பிற்போடுதல் நன்று.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

போட்டியில் வெற்றிகிட்டும். புதனுக்குப்பின் சுற்றோர் விஷயங்களில் திருத்தமிருக்கும். புதுக்கருமங்களுக்குச் சித்தியான வாரம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

சுகத்தைச் சிறிது காலத்துக்குப் பேணவும். சுற்றோர்த் தொந்தரவுண்டு. ஆனல் அபாயமில்லை. வார முடிவில் ஓர் சிறு பிரயாண மேற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் உத்தியோகம் பார்ப்பது அவமானம்

திருமணத்தைப்பற்றிச் சரியாக ஒவ்வொரு கணவனும் அறிவானேயானால் அவன் தனது மனைவி உத்தியோகம் பார்ப்பது ஓர் அவமானமான செய்கை என உணர்வான் என்று தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஓர் கிறிஸ்த ஆலயக் காரியதரிசி எழுதுகின்றார். அவர் மேலும் எழுதுவதாவது இப்பொழுது இருக்கும் குழப்பமான நிலை என்னவெனில் மேலும் மேலும் அநேக பெண்கள் உலக விவகாரங்களில் ஈடுபடுவதுதான். ஒரு பெண்ணுக்கு மனச்சாந்தியும், செல்வமும், என்னவெனில் அவளை வீட்டில் இருந்து வேலை செய்ய விடுதலே என்றும், இப்பொழுது சனத்தொகைக் கணக்கெடுபட்டபோது 1948-ம் ஆண்டு 12,000 ஆகவிருந்த உத்தியோகம் பார்க்கும் பெண்கள் தொகை இவ்வாண்டு 21,000 ஆகக் கூடியிருக்கின்றதென்றும் எழுதியுள்ளார்.

## விற்பனை

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குக் கிட்டுமானமாய் விற்பதற்கு இருப்பது ஒரு நல்ல சுகவீடும் தோட்டமும அதனை அடுத்திருக்கும் வீடு கட்டக்கூடிய நிலமும் இரண்டிலும் காய்க்கின்ற ஒட்டு மாமரங்களும் தென்னைகளும் இருகாணிக்கும் அகன்ற ரோட்டு முகப்பும் கச்சேரிக்கும் கொலீச்சுகளிற்கும் கிட்டுமானது. நல்ல தண்ணீர் வசதி உண்டு. குடியிருப்பதற்கும் நல்ல அமைதியான இடம்.

இரு துண்டுகளும் தனியவோ அல்லது ஒருமிக்கவோ வேண்டலாம் பங்கமில்லாத உறுதி.

வேண்டுவோர் யாழ்ப்பாணம் நல்லூர் 2-ம் குறுக்குத் தெரு முதலியார் எஸ். கந்தையா அவர்களுக்கு எழுதவும்.

S. Candiah,
8—7—52.

M. 72 11—7—52.

## பொலிகண்டித் தேர்த் திருவிழா விபத்து

இரு பெண்கள் தங்கள் நேர்த்திக்கடன்பொருட்டுப் பொலிகண்டிக் கந்தசுவாமி கோவிற் தேர்த் திருவிழாவுக்குச்சென்றனர். ஆனால் அங்கே அவர்களிருவரும் தேர்ச் சில்லில் அகப்பட்டுக் கால்கள் நசுங்கி யாழ்ப்பாணம், அரசாங்க வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபின் மரணமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் நந்தாவிலைச் சேர்ந்த கந்தையாவின் மனைவி சின்னம்மாவாகும். மற்றவர் அல்வாயைச் சேர்ந்த சின்னத்தம்பியின் மனைவி சின்னாச்சியாகும்.

மரணவிசாரணையின்போது சின்னத்தம்பி கூறியதாவது ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தானும் மனைவியும் கோவிலுக்குச் சென்றதாகவும், அங்கே மனைவி தலையிற் கற்பூரசட்டி வைத்துக்கொண்டு தேருக்குமுன் நடந்து சென்றதாகவும், அகஸ்மாத்தாய்ச் சனங்கள் நெருக்கி மனைவி கீழே விழுந்ததாகவும் அதனால் தேர்ச்சில்லு ஏறியதாகவும் கூறினர். இது போலவே மறு பெண்ணும் மரணமடைந்ததாகக் கூறப்படுகின்றது இவ்விரு மரணங்களும் அகஸ்மாத்தாய் நடைபெற்றன என மரண விசாரணை அதிகாரி தீர்ப்புக் கூறினர்.

# சிவஞானபோதச் செம்பொருள் விளக்கம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

சாதி என்று தெரிந்துகொண்ட அரசகுமாரன் தன் பிதாவை வேடர்சேரியிற் தேடான். அரசன் மாளிகையிலே தேடுவான். அப்படியே, தான் சடமன்று, தானும் சிவமும் சிதசாதிப் பொருள்களென்றுணர்ந்துகொண்ட உயிர் அச்சிவத்தைச் சடப்பொருள்களுள்ளே தேடாது. சித்துப் பொருள்களுள்ளேயே தேடும். ஆனால் வேடர்சேரியும் அரசன் மாளிகையும் வெவ்வேறிடங்களில் இருப்பனபோல் சடப்பொருள்களும் வெவ்வேறிடங்களில் இருப்பன வல்ல. சித்துப் பொருள்கள் யாவும் அறிவாகாப் பொருள்கள், அவைகளின் இருப்பைச் சடப்பொருள்களின் இருப்பு ஒரு சிறிதும் பாதியாது. அவைகள் சடப்பொருள்களினூடெல்லாம் வியாபித்து நிற்கும் பொருள்கள். இவ்வாறு வியாபித்து நிற்கும் எல்லாச் சித்துப் பொருள்களினுள்ளும் சிவத்தைத் தேடவேண்டுவதில்லை. யாதானும் ஒரு சித்துப் பொருளினுள்ளே தேடுவதே போதும். தன்னுள்ளே தேடுவதே போதும். தனைனியன்றியே சிவத்தினுபவேசத்தால் உயிர் அறிந்துள்ளதென்றோம் எனவே இவ்வாறு தன்னியல் பறிந்துள்ள உயிர் சிவத்தைத் தன்னுள்ளேயே நாடும் என்பது பெறப்படும். இக்கருத்தை உணர்த்தவே இச்சூத்திரம 'சிந்தைநாடி' என்றோதியது. இனி இவ்வுயிர் தன்னுள்ளேயும எவ்வாறு நாடுமென்பதை ஆராய்வாம்.

### எவ்வாறு நாடுவது?

உயிரறிவின் வியாபகம் ஆணவ மூலைப்பாற் றடைப்பட்டுச் சுட்டுத் தன்மை அடைந்துள்ளதென்றோம். சிவத்தின் அறிவு அவ்வாறன்று. அவ்வறிவுக்கு ஆணவத் தடை எக்காலத்தும் எத்துணையுமில்லை. அவ்வறிவு எக்காலத்தும் வியாபகமாயுள்ள அறிவு. இவ்வாறு வியாபகமா யுள்ள சிவத்தை மேற்கூறியவாறு சுட்டுத் தன்மை அடைந்துள்ள உயிர் எவ்வாறு நாடுவது என்பதே ஈண்டு ஆராய வேண்டுவது. இச்சுட்டுத் தன்மையுள்ளவரை உயிர் சிவத்தை அறியமுடியாதென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படும். ஆணவ மூலைப்பு நீங்கும்வரை இச்சுட்டுத் தன்மையும் உயிரை விட்டு நீங்குமாறில்லை. என்றாலும் யாதாயினும் உபாயத்தால் ஒரு சிறுபொழுதேனும் இவ்வாணவ மூலைப்பை அடக்க முடியுமேல். அப்பொழுது அதனை அடக்கிய உயிர் சுட்டுத்தன்மையினின்றும் நீங்கிச் சிவத்தை ஒருவாறு அறியும் என்பதாய் முடியும். இத்தகைய உபாயம் உண்டா என்பதை ஆராய்வாம். விடமூலைப்பை அடக்குஞ் சக்தி, மாந்திரிகனிடத்து இயற்கையில் இல்லை. கருட தெய்வத்தினிடமே உண்டு. என்றாலும் அம்மாந்திரிகனும் தன்னைக் கருடனாகப் பாவித்துத் தியானிக்க, அவனிடத்தும் ஒரு சிறு பொழுது விட மூலைப்பை அடக்கும் சக்தி உண்டாவதைக் காணுகிறோம். ஆனால் அம்மாந்திரிகனிடத்து அச்சக்தி எக்காலத்தும் நிலைத்திருப்பதில்லை. எப்பொழுது அச்சக்தி வேண்டுமோ அப்பொழுது தன்னைக் கருடனாகப் பாவித்துத் தியானித்து அச்சக்தியைப் பெறுகிறான். இப்பாவனை கருடோகம்பாவனை எனப்படும். இது போன்ற பாவனையாலும் தியானத்தாலும், ஆணவ மூலைப்பை அடக்குஞ் சக்தியினையும் பெறலாம். இச்சக்தி சிவனிடத்து மாத்திரம் உளதேனும், உயிருந் தன்னைச் சிவமாகப் பாவித்துத் தியானிக்க, அத்தியான காலத்து அச்சக்தியினைப் பெறுதல் கூடும். இப்பாவனை சிவோகம் பாவனை எனப்படும். இப்பாவனையால் ஆணவ மூலைப்பு உயிரின்கண் மீளக் கிளம்பாதபடி அடங்கி விடுமென்பதன்று, இப்பாவனைக்காலத்து அடங்கி நிற்பதில் தடையில்லை. இக்காலத்து உயிர் சுட்டுத் தன்மையோடு கூடி நிலலாது. இக்காலத்து இவ்வுயிர் வியாபகமாயுள்ள சிவத்தினை அறிதற்குரியதாம். என்றால், இச்சிவோகம் பாவனையே சிவத்தைத்தன்னுள்ளே நாடும் விதமாம் என முடியும். இம்முடிபையே இச்சூத்திரம 'சிந்தை நாடி' என்றோதியது. ஈண்டு 'நாடி' என்றது பார்த்துத் திரிந்து தேடுதலையன்று. வியாபக சிவத்தை அவ்வாறு தேட

### ≡ சிவதொண்டன் ≡

வேண்டுவதில்லை. பாவித்துத் தேடுதலே போதும். இத்தன்மைத்தான தேடுதலையே, இச்சூத்திரத்து 'நாடி' என்னுஞ் சொல் உணர்த்தும்.

### சிவோகம் பாவனைசெய்யும் உயிர்க்குப் பாசப்பொருள்கள் விரைந்து மறையும்

உயிர் சிவோகம் பாவனையால் ஆணவ மூலைப்பினை அடக்குஞ் சக்தியினைப் பெறுமென்றோம், அம் மூலைப்புக் குறையக் குறைய உயிரறிவின் சுட்டுத்தன்மையும் குறைந்து, அவ்வறிவின் வியாபகத் தன்மையும் அதிகரித்து வருமென்பதாய் முடியும். ஆனால் இச்சிவோகம் பாவனை ஒருபொழுதிற் செய்து முடிக்கப்படுவதன்று. சிறிது சிறிதாய்ப் பழகி வரவேண்டுவது. இப்பாவனையின் பழக்கம் பெருகப் பெருக, இப் பாவனைக் காலத்தில் உயிரறிவின் வியாபகத் தன்மையும் உடன் பெருகுவதாகும். என்றால் இப்பாவனையிற் பழகி வரும் உயிர்க்குப் பாசப் பொருள்கள் எவ்வாறு விளங்குமென்பதை ஆராய்வாம். இப் பாவனை செய்யும் உயிரறிவின் வியாபகத்தன்மை படிப்படியாய் அதிகரித்து வருமென்றோம். பாசப்பொருள்கள் யாவும் சுட்டுப் பொருள்களென்றும், அவை சுட்டறிவிற்க விளங்குமென்றுஞ் சொன்னோம். எனவே, உயிர், சிவோகம் பாவனையிற பழகப் பழக, அவ்வுயிர்க்கு விளங்கி நின்ற பாசப்பொருளகளும மேலும் மேலும் விரைவாய் மறையுமென முடியும். இம முடிபையே இச்சூத்திரம 'உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவ' என உணர்த்தும். அதாவது பாசப்பொருள்கள் பேய்த் தேர்போல ஓடிமறையுமென்பது கருத்து. ஈண்டு 'உராத்துனைத் தேர்த்து என' என்ற வாக்கியத்திலுள்ள 'உரா' என்னுஞ் சொல், ஓடித் திரிதலையும், 'துனை' என்பது வேகத்தினையும், 'தேர்' என்பது பேய்த்தேர் எனப்படும் கானல் சலத்தையும் உணர்த்தும். இவ்வாக்கியத்தின் பொருள் 'ஓடித் திரிதற் கண் வேகத்தையுடைய பேய்த்தேரின இயல்புடையது என' என்பது.

## நூதப்பிரசங்கம்

இப்பொழுது நாட்டு ஆலயங்களில் தலைதூக்கியாடும் தாசிகள் நடனமில்லை நிருந்தும் பெருந் திரளான மக்கள் கூடித் திருவிழாவை வெகு சிறப்பாக நடத்தினர். மேற்படி திருவிழா எழாலை தெற்கைச் சேர்ந்த குராவத்தை என்னுமிடத்திலுள்ள அம்மன் கோவிலில நடைபெற்றது. தாசிகள் நடனத்திக்குப் பதில சைவப் பெரியோரும், சைவச்சிறுருக் கூடி யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் கா. பொன்னம்பலம் அவர்களால், "சங்கரலைத் தூதுவிட்ட சுந்தரர்" என்னும் பொருள்பற்றிப் பக்க வாத்திய சகிதமாகப் பிரசங்கம் செய்வித்தனர். இப்படி நம் நாட்டில் உள்ள சைவாலயங்கள் யாவற்றிலும் நடக்குமேயானால் ஆலயம் உண்மையாகவே ஆன்மாலயப்படுத்தற்குரிய இடமாகும் என்பதில் ஐயமில்லை.


உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா? ●
அப்படியானால் இந்துசாதனத்தில் விளம்பரஞ் செய்யுங்கள்


## பெரியபுராணவுரை நன்கொடை

ஐயா,

சில வாரங்களுக்கு முன் உங்கள் பத்திரிகையில் திரு C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களது பெரியபுராணவுரை வெளியீடு சம்பந்தமாக எம்மால் பிரசுரிக்கபெற்ற விண்ணப்பத்தைப் படித்த கீழ்க்காணும் அபிமானிகள் முதலியாரவர்களுக்கு அவருடைய பெரிய புராணவுரை வெளியீட்டுக்காக பணவுதவி புரிந்துள்ளார்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | |
| திரு. ஸேர். K. வைத்தியநாதன் | 200 — |
| திரு. S. பெரியதம்பி | 10 — |
| கண்டி | |
| திரு. க. வேலுப்பிள்ளை | 25 — |
| திரு. அ. தில்லையம்பலம்பிள்ளை | 100 — |
| காரைநகர் | |
| திரு. P. செல்லப்பா | 15 — |
| | 350-00 |

ஏனைய அபிமானிகளும் இவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி முதலியாரவர்கள் செய்து வரும் அரிய தொண்டுக்குப் பண உதவி புரிவார்களாக. அவர் விலாசம் :

திரு. C. K.
சுப்பிரமணியமுதலியார்,
வைசியாள்வீதி,
கோயம்புத்தூர்.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்,
9—7—52.

M. 75 11—7—72.

## நல்லூர்க் கிராமச் சங்கம்

1952-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிவரை யாழ்ப்பாண டிஸ்திறிக் நல்லூர்க் கிராமச்சங்கத் தலைவரால்

(1) திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை ரோட்டுத் திருத்தம்-மதிப்பு ரூபா 10,000/=

(2) கருணநிதி ரோட்டையும், பலாலி ரோட்டையுந் தொடுக்கும்ரோட்டு அமைத்தல் — மதிப்பு — ரூபா. 10,000/=

ஆகிய வேலைகளுக்குச் "சீல்" இட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும், கேள்விகள், கிராமச் சங்கக் காரியாலயத்தில அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படவேண்டும்; அல்லது பதிவுசெய்யப்பட்ட கடித மூலம் கிராமச்சங்க அக்கிராசனருக்கு அனுப்பப்பட வேண்டும்; அல்லது 19-7-52 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவிருக்கும் கிராமச்சங்கக் கூட்டத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 10/= கட்டுக்காசு கட்டியதன் பேரில், கிராமச்சங்க அக்கிராசனரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்பட வேண்டும்.

மேலதிகமான விபரங்களைதுவும் நல்லூர்க் கிராமச்சங்க அக்கிராசனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
Dr. S. Chelliah

அக்கிராசனர்
நல்லூர்க் கிராமச்சங்கம்

M. 74 11, 15—7—52.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின் மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு பொ. கா. தாமோதரம் பிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி எடுபடாமல் இருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகள் 2-8-52 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | உ.மீ.ஞு. | கொடுத்த ரூபாய் | ஊர். பெயர். | நகைவிபரம். |
|---|---|---|---|---|
| 4591 | 6—6—51 | 200 | சுண்டிக்குழி. முத்தையா-தவகணேசன். பூவேலைசெய்த பவுண் ஒன்று இமி சல். | |
| 4595 | ,, | 55 | நாச்சியம்மன் கோவிலடி A. சோமசுந்தரம்-இராசசுந்தரம் சங்கிலி | 1 |
| 4610 | 9—6—51 | 15 | மண்டதீவு. குழந்தை-கணபதிப்பிள்ளை இமி. சி. கல் பெண்டன் | 1 |
| 4611 | 11—6—51 | 30 | உரும்பிராய் தெற்கு. சின்னத்தம்பி பொன்னுத்துரை. இமி சி. வெ. கல் தோடு சோடி | 1 |
| 4618 | ,, | 15 | நவாலி தெற்கு சின்னத்தம்பி-கந்தையா இளாவர் மோதிரம் | 1 |
| 4629 | 14—6—51 | 160 | திருநெல்வேலி மேற்கு வல்லிபுரம்-சுப்பிரமணியம். பழுது சாட்டுக்கொடி | 1 |
| 4630 | ,, | 30 | திருநெல்வேலி மேற்கு. வல்லிபுரம்-சுப்பிரமணியம். இமி.கல் ஆகூரக்கூடு | 1 |
| 4688 | 26—6—51 | 30 | கொக்குவில் கிழக்கு. தம்பையா - சிவரெத்தினம். தாலி 1ம் குண்டு | 2 |
| 4704 | 30—6—51 | 55 | உடுவில் தெற்கு நாகமுத்து-மாணிக்கம். கம்பிக்காப்பு சோடி | 1 |

ஏலவிற்பனவு 2—8—52 சனிக்கிழமை.

S. PASUPATHY CHETTIAR

7—7—52. Auctioneer.

M. 70 8 & 11—7—52

## நீர்வேலி கிராமச்சங்கவேலைகளின் ஒப்பந்த அறிவித்தல்

பின்னுற் காணப்படும் கிராம வேலைகள் ஒப்பந்தமாகக் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன:-

கிராமச்சங்கக் கந்தோரில் ரூபா 10 கட்டி எடுக்கும்மாதிரிப்பத்திரங்களிலேயே மனுச்செய்யவேண்டும். அப் பத்திரங்கள் 1952-ம் ஆடு ஆடிமீ 18-ம்உ வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குமுன் ஷை சங்கக் கந்தோரில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கடதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டு கூட்டின் இடது மேற்பக்கத்தில் மனுப்பத்திரம் என்று எழுதி நீர்வேலி கிராமச் சங்கத் தலைவருக்கென உரும்பராய் விலாசமிட்டு 1952-ம் ஆடு ஆடிமீ 19உ சனிக்கிழமை பகல் 8 மணிக்குமுன் ஷைசங்கக் கந்தோரில் கிடைக்கும்படி அனுப்புக.

தெரிந்தெடுத்த கேள்விக்காரன் ஷைசங்கத் தலைவருடன் ஒரு கிழமைக்குள் பொருத்தம் எழுதிக் கொள்ள வேண்டும். மனுப் பத்திரங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ சங்கத்துக்கு அதிகாரமுண்டு.

வேலைகளின் விபரம்

உரும்பராய் தச்சகடவைக் கிராமச் சங்க ஒழுங்கையை ரோட்டாகத் திருத்துகிறதற்கு ஒப்பந்தப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

K. Thambiah,
கிராமச்சங்கத் தலைவர்.
நீர்வேலி
952-ம் ஆடு யூலைமீ 7உ.
M. 71 8 & 11—7—52.

## விளம்பரம்

### வேலணைக் கிராமச்சங்கம்

கீழ்க் காணும் வேலைகட்கு கேள்விப் பத்திரங்கள் மேற்படி சங்கத் தலைவரால் 1952 ம் ஆண்டு ஆடி மாசம், 23 ந் திகதி 3 மணிக்குமுன் ஏற்கப்படும்.

வடபகுதி ஸ்தலஸ்தாபன அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட கொந்தூாத்துக்காரர்களுக்கு மாத்திரம் ரூபா 12/= கட்டியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

முழு விபரங்களும் மேற்படி சங்கக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

வேலைகள்

1. வேலணை - சுருவில் தெரு அமைத்தல்.
2. கேணியடிக்கிணறு தோண்டல்.

இப்படிக்கு,

மா. சிவராசா

ஷை கிராமச் சங்கத் தலைவர்
வேலணை.

M. 66 11—7—52.

நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி

## தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும் பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும் நீரழிவு, பவுத்திரம, மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

## குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(பேரட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.

# இலக்கியத்திற் சிறு கதை எடுத்துக்கொண்ட இடம்

( முதற் பக்கத் தொடர்ச்சி )

புதுமை'என்ற புத்தகம்எழுதினுல் கைமுதல் கரியாவதைத் தவிரக் காணும் இலாபமொன்றில்லை. அதேசமயத்தில் 'புதுமைக் காதல்; என்றொரு புத்தகம் போட்டால கைமேல் இலாபம்!... எவன்தான் இந்தக் காலத்தில் கஷ்டமடைய விரும்புவான்?

இன்றைய சூழ்நிலை அறிவுக்கு மதிப்புக் கொடுப்பதாயில்லை. எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அவற்றில் கட்டாயம் இரண்டுபடிகளிருக்கத்தான் செய்கின்றன. அவற்றிலொருபடி ஊழலின் உத்தியோக வாசஸ்தானம். இதை இன்றைய சமுதாயம் உணர்ந்தபாடில்லை. சமுதாயம் இதனை உணரும் வரைக்கும் எழுத்தாளர்கள் யாவரும் கஷ்டப்பட்டுத்தானுகவேண்டும்.

உயர்ந்த சிருட்டி, தாழ்ந்த சிருட்டி என்பதெல்லாம் இப்பொழுது வெற்றுப் பேச்சு. இலக்கிய உலகம் இந்தச் சிருட்டிகளை இன்று எடுத்துப் பார்க்கவும் தயாராகவில்லை. இதற்கு ஒரு உதாரணம்:-

என்னுடைய கட்டுரைகளைக் கதைகளை ரசித்துப் படிக்கும் ஒரு சகோதரி, அவரிடம் நான் எழுதிய ஓர் சரித்திரக் கதையைக் காட்டியபொழுது "சீ இதென்ன கதை? காதல் கற்பனையில்லாத கதையும் ஒரு கதையோ" என்று சீறிவிழுந்தார். அமைதியாகப் படியுங்கள். 'அது' இருக்கின்றது என்றபிறகு தான் அவர் அதைப் படித்து ரசித்தார்.

இவ்வளவு தூரத்திற்கு இலக்கிய உலகம் 'முன்னேறி' யிருக்கும் பொழுது யார்தான் என்னசெய்ய முடியும்? இலட்சியம், வாழ்க்கை என்பதெல்லாம் கற்பனையில் தவிர நிச வாழ்க்கையில் நிகழமுடியாத சம்பவங்கள் என்றுதானே எண்ணக்கிடக்கின்றது?

### ஒரே ஒரு முறை....!

ஆனுல் நமது கதாசிரியர்களும் கொஞ்சம் நிதானமாகப் போகவேண்டும். வாழ வழியில்லையே என்று முடிவுகட்டிவிட்டுச் சுத்த ஆபாசக்களஞ்சியங்களைப் பிரசுரஞ் செய்துவிடக்கூடாது. ஆபாச இலக்கியத்தால் கெடுபவர்கள் நமது பிற்காலச் சந்ததியினரே. இதனுல் நான் "சிரஞ்சீவி"யின்மீதும் "ஜெகசிற்பியன்"மீதும் "வாசவன்"மீதும் வசை புராணம் பாடுகின்றேனென்று அர்த்தமல்ல! எதற்கும் ஒரு வரம்புண்டு-இலட்சியமுண்டு. அளவுக்கு மீறிய நிலைமையை நாம சிருட்டிக்கவிடக் கூடாது.

இலககியம் என்பது ஏதோ மது வெறியில் புரளுகிறவன் காணுகின்ற பகற்கனவல்ல. வாழ்க்கையின் உண்மைப் படப்பிடிப்பாய் அமைந்து மனிதனை மனிதனுக வாழச்செய்யும் மாண்பு அதனிடம் இருக்கிறது. புதுமைப் பித்தன் எழுதிவிட்ட '..........' த்தைப் பிரதி செய்துவிட்டு இதோ நான் புதுமைப் பித்தனின் .........விட்டேன் என்று வாய்குழறுவது வெறும் சித்தப்பிரமையே தவிரச் சிந்தனைத்திறனதல்ல. எனவே நமது எழுத்தாள நண்பர்கள் இரசிக உலகிற்கு ஒரே ஒரு முறை அவகாசமளிக்க வேண்டும். இன்றைய உலகிற்குத் தேவையானது வெறும் ஆபாசக் கற்பனையுமல்ல, ஆத்மீகப் பிதற்றலுமல்ல, உண்மை வாழ்க்கையின் படப்பிடிப்பு என்பதை உணரச் செய்வதற்கு.

### நமது நாட்டிலே!

இன்று நமது நாட்டிலே ஒரு ஆரவாரமான சூழ்நிலை 'சல சல,த்துக்கொண்டிருக்கிறது. எத்தனையோ இளம் எழுத்தாளர்கள் தாய்மொழி இலக்கியத்தில் தணியாத தாகங்கொண்டு எழுதி வருகிறூர்கள். அவர்களுடைய எழுச்சியெல்லாம் வீண்போகாமலிருப்பதற்கு நாம் வேண்டியன செய்ய வேண்டும்.

ஏதோ 'இதர நடை' யில் எழுதிவிட்டு உயர்ந்துவிட்டோம் என்று அவர்கள் ஊளைபாடாமலிருக்க வேண்டும், அவர்களுக்கென்று ஒரு தனிநடை, தனிப் 'பாணி' இருக்கவேண்டும். "..... வண்டி' வேகமாக வந்துகொண்டிருந்தது', என்று கதையை ஆரம்பிக்காமல் 'சூரிய கிரணங்கள் மகாவலிகங்கையிற் குளித்து மீண்டன." என்று தாய் நாட்டின் ஆழ்நிலையையும் சரித்திரத்தையும், வளத்தையும் வைத்து அவர்கள் கதை புனைய வேண்டும். அப்பொழுதுதான் நமது நாடு இலக்கிய ஒளிபெற்று உயரும்.

இதுதான் இன்றுள்ள தமிழிலக்கிய வளர்ச்சிக்கு முதற் படி. எந்த நாட்டிலும் உள்ள பொது விதிகள் நமக்கும் உரியனவே. ஆனுல் நமக்கென்றுள்ள சிறப்பியல்புகளை நாம் பறிகொடுத்து விடக்கூடாது. இதனை நமது இளந் தமிழ் எழுத்தாளர்களும் இலக்கிய இரசிகர்களும் மனத்திற் கொள்வார்களாக.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசுலோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

| திறமான | திறமான |
|---|---|
| தேக்க மரங்கள் | ருணிமார்க் ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday. July 11. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org